## வேசியியல் –By *Murali Venkatraman*

இரண்டு வருடங்களுக்கு முன்னே உதயாவிடமும் மற்ற நண்பர்களிடமும் இணையத்தில் அளவளாவிக் கொண்டிருந்த போது பாலியல் தொழிலாளிகள் பற்றிய ஒரு பேச்சு எழுந்தது. அவர்களுக்கு தேவதாசி என பெருமை செய்த காலத்தில், பாராளும் மன்னர் முதல் பாமரர் வரை காமக் கலையின் நுணுக்கங்களுக்காக அவர்களிடம் சென்று பயின்று வந்ததாக பல நூல்கள் கூறுவதுண்டு. அவர்களுக்குச் சமுதாயத்தில், அத்தொழிலுக்கென்ற ஒரு மதிப்பு வழங்கப் பட்டு இருந்தது.

அவர்கள் விரும்பி அத்தொழிலை ஏற்றுக்கொண்டு இருந்திருக்க மாட்டார்கள் என்றாலும் அவர்களை நாயினும் கீழ் சாதியென நடத்துகின்ற விதம் போகப் போகத்தான் உருவானது. ஒரு ஆணாதிக்கச் சமுதாயத்தில் மெல்லியலாரின் கூக்குரல்கள் குறுகித் தேய்ந்து அழிந்து போய் விட்டன. அவர்களின் இன்றைய நிலமையோ கேட்கவே வேண்டாம். உடலை சிதைக்கின்ற உயிர்க்கொல்லி வியாதிகள் ஒரு புறம். மனதை வதைக்கின்ற மனிதர்கள் மறுபுறம். ஒரு பெண் இத்தொழிலுக்கு வருவாளேயானால் அவள் சந்தர்ப்ப வசத்தால் எவ்வளவு இழந்து இருப்பாள் என்று சிந்தித்துப் பாருங்கள் ?! எத்தனை வலிகளைத் தாங்கிக் கொண்டு வந்து இருப்பாள் ?! அவள் அளிக்கும் உடலின்பத்திற்கு பதிலாக அவளுக்கு கிடைப்பதெல்லாம் உடல், மன வேதனை மற்றும் சிறிதளவு பணம். அவ்வளவு தான்.

எங்கள் உரையாடலின் போது என்னுள் ஒரு எண்ணம் எழுந்தது. ஒரு வேசி தன் நிலைமையைப் பாடி தனக்கும் சமுதாயத்தில் மதிப்பு கேட்பது போல் எழுதினால் எப்படி இருக்கும் என்று தோன்றியது. அப்படி ஒரு கற்பனையில் தோன்றியவை தான் வரப்போகும் இந்த 10 பாடல்கள். அதில் முதல் பாடலை உங்களுக்கு தருகிறேன்.

இந்தப் பாடலும் மற்ற வரும் பாடல்களும் ஒரு வேசிப்பெண் பாடுவதாக அமைந்துள்ளது

(1)

**சிற்றாளும் பேராளும் ஒன்றே இங்கு**
**சிறிதேனும் முகம்கோணி நில்லோம் என்றும்.**
**பொற்றாரை பொழிகின்ற மாந்தர்க்கெல்லாம்**
**பொழுதென்ன இரவென்ன? இன்பம் உண்டு.**
**கற்றாரை கற்றாரே காமுறுவாராம்**
**கல்வியது இல்லாதார் செல்வார் எங்கு ?**
**உற்றாராய் அவரையுமே போற்றி நாங்கள்**
**உடலின்பம் உளமின்பம் இரண்டும் தந்தோம்**

**பொருள்**:

எங்களுக்கு உடலிலோ குணாத்திலோ வேறு எதிலும் சரி சிறியவர் பெரியவர் என்ற பாகுபாடு இல்லை. என்றும் நாங்கள் எவரைப் பார்த்தும் முகம் கோணி நிற்க மாட்டோம். பொன்னை தாரையாக (மழையாக) பொழிகின்ற மனிதருக்கெல்லாம் (பகல்)பொழுதா இரவா என்று எல்லாம் பார்க்காமல் இன்பம் தருகிறோம். (காமக் கலை) கற்றவர்களுக்கு கற்றவர்களை மட்டுமே பிடிக்குமாம். ஆனால் கல்வி அறிவு இல்லாதவர் எங்கு போவார் ? அவர்களையும் உற்றவராய் நினைத்து நாங்கள் உடலுக்கும் மனதுக்கும் இன்பம் அளிக்கிறோம்.

(2)

**தேகத்து உதிக்கின்ற தேவை எல்லாம்**
**தேவரவர் மூன்றெனவே கண்டார் மண்ணில்.**
**தாகத்தில் வீழ்காலம் தண்ணீர் வேண்டும்**
**தளருங்கால் வயிற்றுக்குச் சோறும் வேண்டும்**
**காகத்து அனைய ஒரு அழகிருந்தாலும்**
**காயத்தில் காதலெனும் நோய்நின் றாடி**

மோகத்தீ மூண்டுவிடின் பெண்ணை நாடி
போகத்து உய்ப்பதுவே நன்மை என்பார்.

**பொருள்:**

உடலிலே தோன்றுகிற ஆசைகள் என மூன்றைச் சொல்லுவார்கள் பெரியவர்கள். தாகம் – அதுவரும் போது தண்ணீர் வேண்டும். பசி – அது வந்தால் வயிறு தளர்கிறது. சோறு வேண்டும். மோகம் – இது இயற்கையால் உந்தப் படும் தாபம். காகத்தை போன்ற அழகு படைத்தவராயிருந்தாலும், தன் காயத்தில் (உடலில்) காதல் நோய் பற்றி விட்டால், பெண் மட்டுமே அதனை தீர்க்க முடியும் என்று பெரியவர்கள் கூறி வைத்துள்ளானர்.

(3)

நாடாளும் மன்னர்கள் நங்கை தம்மை
நயம்பேசி பயம்தந்து பொருளும் தந்து
கூடாரம் பலவைத்துக் கூடிக் கொள்வார்
கூற்றுவனின் குரல்கேட்கும் வரையில் மண்ணில்.
ஈடாகப் பொருள் ஈட்ட இயலா மக்கள்
இம்மன்னர் போலவரைக் கொள்ளார் எனினும்
கூடாமல் உய்ப்பதுவும் கூடாதென்றே
கூச்சங்கள் நீக்கிஎம் வாயில் வந்தார்.

**பொருள்:**

இப்படிப்பட்ட மோகத்தீயானது நாடாளும் மன்னர்களை எப்படி ஆட்டுவிக்கிறது ? அவர்கள், நயமாகவும் தன் பதவி பற்றி பயமாகவும் பேசி, பின்னர் பொருளும் தந்து பல கூடாரங்களிலும் பல பெண்களைப் பராமரித்து சல்லாபம் புரிவர். கூற்றுவனின்(எமன்)அழைப்பு வரும் வரை இங்கனமே செய்கின்றார். ஆனால் அவர்களைப் போல பொருள் ஈட்டி பல பெண்களோடு கூட முடியாமல் போகும் பாமர மக்களோ காமத்தீ வந்து விட்டால் என்ன செய்வார் ? "ஒரு பெண்ணோடு கூடாமல் போனால் வாழ்க்கை முழுமை பெறாது. எனவே நாமும் சிறிது

சிற்றின்பம் பெற வேண்டும்"என்று முடிவு செய்து கூச்சத்தை நீக்கி எங்கள் வாசலுக்கு வருகிறார்

(4)

**பகலவனைப் பார்த்தீரா நாளும் நின்று**
**பழுதற்ற ஒளிதருவான் பார்ப்போர்க்கெல்லாம்**
**தகலெவரோ கொண்டுள்ளார் தாரணியில் தான்**
**தருணமதும் தளர்வின்றி தரவே இன்பம் ?**
**இகல்இவரின் இன்மனதை குருதிக் கோலம்**
**இல்லாளால் செய்துவிடின் இனிமை வேண்டிப்**
**புகல்இவரைப் புன்முறுவல் பூத்தே சற்றும்**
**புழுக்கமது காட்டாது புணரல் செய்வோம்**

**பொருள்:**

சூரியனைப் பார்த்து இருக்கிறீர்களா ? அவன் ஒவ்வொரு நாளும் வானத்தில் வந்து நின்று, பார்ப்பவருக்கெல்லாம் பழுது இல்லாத ஒளி தருவான். சூரியனைப் போல எந்நாளும் உலகத்தில் எந்தத் தருணமும் தளர்வு இல்லாது, குறை இல்லாது இன்பம் தருவதில் எமக்கு நிகர் யாரும் உண்டோ ? இல்லாளின் சொல்லால் மனம் காயமுற்று விட்டால், இனிமையைத் தேடி எங்கள் வாசலில் புகும் இவர்களை, புன்முறுவல் காட்டி மனப் புழுக்கம் எதுவும் இல்லாமல் புணரலால் இன்பம் அளிக்கின்றோம்.

(5)

**பெருங்கோவில் வாயிலது இரவில் மூடும்**
**பெரியார்தம் பள்ளிகளோ மாலை மூடும்**
**பெருங்கோவின் மனையினிலும் தர்மம் வேண்டி**
**கையேந்தி நின்றிடவும் காலம் உண்டு**
**உறங்காமல் கடல்ஒன்றே எக்கணமும்நல்**
**உவகையுடன் எவர்காலும் தீண்டும்; வதனம்**
**சுருங்காமல் வரவேற்று சுகங்கள் காட்டும்**
**சுந்தரிகள் யாங்களுமே வாரிதியன்றோ ?**

**பொருள்:**

பெரிய கோவிலின் வாசல் கூட இரவில் மூடி விடும். கற்றறிந்த பெரியவர்கள் போதிக்கும் பள்ளிகளோ மாலை மூடி விடும். பெருங்கோவின் (பெரிய அரசனின்) வீட்டினிலும் இரந்து கையேந்தி நின்றிடவும் ஒரு சமயம் இருக்கிறது. உறங்காமல் கடல் ஒன்று மட்டும் தான் எந்நேரமும் எத்தனை பேர் வந்தாலும் அவர்களின் கால்களைத் தீண்டி மகிழ்விக்கும். முகம் சுருங்காமல் எல்லாரையும் எந்நேரமும் வரவேற்று இன்பத்தை அளிக்கின்ற நாங்கள் அந்தக் கடல் (வாரிதி) போலத் தானே ?

(6)

**ஞானங்கள் தருகின்ற பெரியோர்க்கெல்லாம்**
**நல்லமுறை செய்திடுவார் குருவே என்பார்**
**தானங்கள் பலதந்து வறியார் தம்மின்**
**பசிநீக்கும் பண்பாளார் புரவலராவார்**
**கானங்கள் செய்வோரைக் கவியே என்பார்**
**காதலெனும் அமிழ்தத்தை வார்க்கும் எம்மை**
**ஈனங்கள் என்றேனோ புறமும் தள்வார் ?**
**இவ்வுலகில் இஃதின்றி இன்பம் உண்டோ ?**

**பொருள்:**

கல்வியைக் கற்றுத் தருகின்ற பெரியவர்களுக்கு முறையான மரியாதைகள் செய்து குரு என்று போற்றுகின்றனர். தானங்கள் செய்து வறியவர்களின் பசியைப் போக்குகின்ற குணம் கொண்டவர்களை புரவலர்கள் என்று போற்றுகின்றனர். கானங்கள் செய்து பொருள் ஈட்டுகின்றவர்களைக் கவி என்பார். இப்படி பலரும் பலது செய்து வாழ்கின்றனர். சிலர் தொழிலாகவும், சிலர் சேவையாகவும் இதனை செய்கின்றனர். இவர்களுக்கெல்லாம் நல்ல மரியாதை கிடைக்கிறது. ஆனால், காதல் எனும் அமிழ்தத்தை தருகின்ற எங்களை மட்டும் ஈனப் பிறவிகள் என்று

எள்ளி நகையாடி ஒதுக்கி வைக்கின்றார்களே ? ஏன் ? காதலும் காமமும் இல்லாமல் உலகின் இன்பமும் இயக்கமும் இருக்குமா ?

(7)

**அன்புருவாய் நுகர்வோரை என்றும் நோக்கி**
**அலுத்தாலும் கனிவதனை கண்ணில் தேக்கி**
**இன்புறுவீர் இவ்வுடலின் மீதே என்று**
**இன்முகமும் செய்துஇதழ் அமுதம் தந்தால்**
**பண்பறவே இல்லாமல் பாய்ந்தே எம்மை**
**பரிவோடு நுகராது புலியாய்ச் சீறி**
**வன்புணரல் செய்தெங்கள் வலியை ஏற்றும்**
**வாலிபரே விலங்கிற்கோ பிறந்தீர் நீரே ?**

**பொருள்:**

நுகர்வோரை (customers) அன்பே உருவாகப் பார்ப்போம். எங்கள் வேலையை அலுத்தாலும் கனிவைக் கண்களில் காட்டுகிறோம். எங்கள் உடலின் மீது இன்பம் அடைவீர் என்று சிரித்து இதழ்களால் அமுதத்தை வார்க்கிறோம். ஆனால் பண்பு சிறிதும் இல்லாத வாலிபர்களே ! பரிவோடு, மென்மையாக மலர் போல எம்மை கையாண்டு நுகராமல் (smell the fragrance) புலி போல பாய்ந்து எங்களுடன் வன்புணார்ச்சி வைத்துக் கொள்ளுகிறீர்களே ! நீங்கள் என்ன விலங்கிற்கா பிறந்தீர் ?

(8)

**எல்லுருகும் நோய்களெலாம் எம்மை அண்டும்**
**எனவே நாம் கவனமுடன் செய்தல் வேண்டும்**
**சொல்லியிதை வைத்தாலும் கேளார் மக்கள்**
**சுமையாக நோய்களையே சுமத்திப் போவார்**
**வில்லியென பின்னரெமை ஆக்கி வைப்பார்**
**வெம்பிடுமே மனதோடு உடலும் நாளும்.**

**கல்லுருகும் எம்கதையை கேட்டால் ஆனால்**
**கனியாமல் போவதுமேன் உலகார் நெஞ்சம் ?**

**பொருள்:**

எலும்பை உருக்கும் நோய்களெல்லாம் எங்களை அண்டக்கூடும். எனவே ஐயா, நாம் பாதுகாப்புடன் உறவு வைத்துக் கொள்ள வேண்டும் என்று பலமுறை விண்ணப்பித்துச் சொன்னாலும் எம்மை அண்டி வருவோரில் பலர் காது கொடுத்து கேட்க மாட்டார். பாதுகாப்பற்ற முறையால் பல நோய்களை எமக்குச் சுமையாக தந்து விட்டு போகிறார். ஆனால் எங்களைத் தான் வில்லியாகப் பின்னர் சொல்வார்கள். என்னவோ நாங்கள் மட்டும் தான் இதற்குக் காரணம் போன்று. நோயால் உடல் வெம்பும். ஊர் வாயால் உள்ளம் வெம்பும். எங்கள் கதையைக் கேட்டால் கல் கூட உருகிடும். ஆனால் சமுதாயத்தின் மனது மட்டும் இளக மாட்டேன் என்கிறதே ?

(9)
**கல்வெட்டு கணிதமென கல்வி பலதும்**
**கற்றவர்கள் நிலை வளர்க்க சங்கம் உண்டு**
**கல்வெட்டும் தொழிலுக்குச் சங்கம் உண்டு**
**கடைவைக்கும் வணிகர்க்கும் சங்கம் உண்டு**
**கள்கட்டும் தொழிலுக்கும் சங்கம் உண்டு**
**கயவர்க்கும் வேசியர்க்கும் சங்கம் இல்லை**
**முறையான வணிகத்தால் மோகம் தீர்க்கும்**
**காரிகையும் கயவருமே ஒன்றா சொல்வீர் !**
**பொருள்:**

(கல்வெட்டு என்பது இங்கே இலக்கியத்தை குறிப்பதாக வைத்துள்ளேன்). இலக்கியம் கணிதம் என்று படிக்கும்/போதிக்கும் மக்களின் வாழ்க்கை தரம் உயர்த்த சங்கங்கள் இருக்கின்றன. கல்லை உடைக்கும் தொழிலாளிக்கும் சங்கம் இருக்கிறது. கடை வைத்து வியாபாரம் செய்கின்ற வணிகர்களுக்கும் சங்கம்

இருக்கிறது. கள்ளைக் கட்டி இறக்கி வணிகம் செய்பவர்க்கும் சங்கம் இருக்கிறது. ஆனால், திருடர்களுக்கும் வேசிகளுக்கும் சங்கம் இல்லை!! நாங்கள் என்ன திருடுகிறோமா ? முறையான வணிகம் செய்து தானே வாழ்கிறோம் ? எங்களுக்கும் கயவர்களுக்கும் வேறுபாடு இல்லையா ? இருவரும் ஒன்று தானா ? எங்களுக்கு நியாயமாக ஒரு சங்கம் வேண்டாமா ?

(10)

**போராத காலத்தால் எம்மை விற்று**
**புண்ணாகி நொந்துள்ளோம் நீங்கள் மேலும்**
**தீராத மனவலியை தாராதீரும்**
**மதியாமல் இருந்தாலும் மிதியாதீரும்.**
**சீரோடு வாழ்கின்ற வாழ்வா கேட்டோம் ?**
**சிறிதளவே சிந்தித்து பார்ப்பீர் நீங்கள்.**
**நீரோடு உணவும்நல் நித்திரை யோடும்**
**நிம்மதியாய் வாழ்கின்ற வாழ்வே போதும்**

**பொருள்:**

எங்களின் போராத காலத்தால், உடலை விற்று ஏற்கனவே மனம் புண்ணாகி நொந்துள்ளோம். ஏ சமுதாயமே! நீங்கள் வேறு எங்களை மிகவும் கீழ்த்தரமாக நடத்தி எங்கள் வலியை கூட்டாதீர்கள். எங்களை மதிக்காமல் இருந்தாலும் பரவாயில்லை. ஆனால் துன்புறுத்தாமல், இருந்தாலும் போதும். நாங்கள் என்ன எங்களை தலையில் வைத்துக் கொண்டு ஆட வேண்டும் என்றா எதிர்பார்க்கிறோம் ? அப்படிப்பட்ட சிறப்பான வாழ்வையா கேட்டோம் ? கொஞ்சம் சிந்தித்துப் பாருங்கள். ஒரு விலங்கிற்கும் மனிதனுக்கும் அத்தியாவசியம் எனப்படுகின்ற மூன்றான நீர், உணவு, நிம்மதியான நித்திரை – இது மூன்றையாவது தாருங்கள். அந்த வாழ்வே போதும். அதற்கு கூட வழியில்லாமல் செய்து எங்களை துன்புறுத்தாதீர்கள். நாங்களும் மனிதர்களே !